அலுவலகம் இருக்கிறதா? எங்கே போய் அவர்களைக் கண்டு நாங்கள் அந்தக் கோரிக்கையைக் கொடுக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்டம் வந்தது என்று சொல்லவில்லை. முதலிலே 1969-ல் அமைக்கப்பட்டது. மறுபடி குழு அமைக்கப்பட்டது, 1977-ம் ஆண்டு சனவரி மாதம். அந்தக் குழு சுற்றுப் பயணம் செய்து யார் யார் மனுக்கொடுக்கிறார்களோ அவற்றைப் பெற்று பரிசிலனை செய்து பரிந்துரை வழங்கும். அது தான் அந்தக் குழுவின் வேலை. அதை நன்றாக உபயோகித்துக் கொள்ளும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ந. குனசேகரன்: தலைவரவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளில் குறைந்தபட்சம் ஊதியம் கொடுப்பதற்காகவே நிரந்தரமற்ற தொழிலாளர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டத்தின் மூலம் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் கேட்பது மூலக்கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

தொழிலாளர் நலத் துறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு.

*வினா எண் 148—

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலாளர் நலத்துறையில் எத்தனை பேருக்கு எத்தனை சதவீதம் வேலை வழங்கப்பட்டிருக்கிறது மாவட்ட ரீதியாக?

(ஆ) சட்ட ரீதியான ஒதுக்கீடு செய்வதென்பது இத்துறைக்கு பொருந்தாது என்று தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் அதன் 1973–74-க்கான ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) தொழிலாளர் துறையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 223.

வழங்கப்பட்டிருக்கும் சதவீதம் 12.
மாவட்ட ரீதியாக நியமனம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1.	திருச்சி	14
2.	சேலம்	26
3.	சென்னை	47
4.	செங்கல்பட்டு	17
5.	திருநெல்வேலி	5
6.	கோயம்புத்தூர்	30
7.	நீலகிரி	19
8.	மதுரை	20
9.	ராமநாதபுரம்	9
10.	தஞ்சாவூர்	13
11.	புதுக்கோட்டை	..
12.	கன்னியாகுமரி	1
13.	தென் ஆற்காடு	5
14.	வட ஆற்காடு	14
15.	தர்மபுரி	3
		223

(ஆ) ஆம்.

(இ) மறுபரிசீலனை செய்து சட்ட ரீதியான ஒதுக்கீடு முறை அமைச்சுப் பணிக்கான நேரிடை நியமனங்களிலும் 1975 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே 1973-74 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் Reservation for S.C. and S.T. is not applicable in Labour Department என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவர்கள் அதற்கு பதில் தரவில்லை. இப்போது 12 சதவீதம் தான் தந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் சட்ட ரீதியாக 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கு தர வேண்டும். அப்படி இருந்தும் ஏன் தரவில்லை? அதற்கு யார் காரணம்? அவர்களமீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

[1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவல் சரியானது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 31 சதவீதம் பிற்பட்டோர் மக்களுக்கும் வேலைகளில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்குக் கட்டாயம் ஒதுக்கிய சதவீதப்படி வேலை கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்து, நியாயம் கிடைப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சொ. ந. பழனிசாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலாளர் நலத் துறையிலே 223 பேர்களுக்கு மட்டும்தான் இப்போது வேலை வாய்ப்பு தரப்பட்டுள்ளது என்று கனம் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இதை மேலும் அபிவிருத்தி செய்து, அதிகப்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 18 சதவீதத்திற்குப் பதிலாக 12 சதவீதம்தான் இருக்கிறது என்பதையும், 18 சதவீதமாக அதை உயர்த்த இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் பெரும்பாலான தனியார் தொழிற் கூடங்களில் அவைகள் அரசிடமிருந்து மானியம் பெற்றும் வங்கிகளிடமிருந்து கடன் பெற்றும் தொழில் நடத்திக் கொண்டிருந்தாலும், இந்த 18 சதவீத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுப்பதில்லை. கட்டாயமாக அவர்களையும் 18 சதவீதம் கொடுக்கச் சொல்லி, நடவடிக்கை எடுக்கப்படுமா ? குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. அங்கு பெரும்பாலும் முஸ்லீம் சமுதாயத்தினருக்கு மட்டும்தான் வேலை கொடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் 18 சதவீதம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக்கேள்வி தொழிலாளர் நலத் துறையில் எத்தனை சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதாகும். அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பார்வர்டு கிளாசில் இருந்தவர்களையும் பாக்வேர்டு கிளாசில் சேர்க்கப்பட்டது என்றும் ஆகவே, பாக்வேர்டு கிளாசுக்கு அதிகமாக இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு வருவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? பக்கத்திலுள்ள மற்ற ஸ்டேட்களில்

ஆந்திரா, கர்நாடகம் அங்கெல்லாம் 35, 36 சதவீதம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலும் செய்ய திட்டம் உண்டா?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். தலைவரவர்களே, அவ்வப்போது அறிவிக்கப்படுகிற அரசு ஆணைக்கேற்ப தொழிலாளர் நலத்துறை நடந்து கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, 18 சதவீதம் கொடுத்தாக வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதா? அது என்றைக்கு போடப்பட்டது என்றும் இனி வரக்கூடிய காலி இடங்களை நிரப்பும் வரை அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே 1975லே இருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பட்டு இப்போது அந்த சதவீதத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன. கேண்டிடேட்ஸை எம்ப்ளாய் மெண்ட் எக்சேஞ்சிலிருந்து அனுப்பும்போது அந்த முறையைக் கையாண்டு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் முயற்சி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. ம. யூசுப்: தலைவரவர்களே, வினா எண். 148-க்கு ஒட்டிய துணைக் கேள்விகள் போடப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் தனியார் வேலைகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கல்லாமல், தமிழர்களை நீக்கிவிட்டு முஸ்லீம்களுக்குக் கொடுப்பதாகவும், தமிழர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற வகையிலும் கேள்வியைக் கேட்டார்கள். அந்தக் கேள்வி அனுமதிக்கப்படுமானால் முஸ் லீம்கள் தமிழர்கள் அல்ல என்கின்ற கருத்தை உண்டாக்குமா கையால் தயவு செய்து அதைத் திருத்த வேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்.

கூடலூர் வட்டத்தில் பால் வழங்கு சங்கங்கள் மூலம் கடன்கள்.

*வினா எண். 149—திரு. கே. உச்சி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

1977-78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டப் பேரவை தொகுதியில் எத்தனை அரிசன மக்களுக்கு பால் வழங் கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பசுக்கள் வாங்க கடன் வழங்கப்பட்டது?